09.03.16

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோடை: பறவைகள், கால்நடைகள் தாகம் தணிக்க புதிய முயற்சி

கோடைக்காலத்தில் பறவைகள், கால்நடைகள் உள்ளிட்டவற்றின் தாகத்தைத் தணிக்க கால்நடைகளுக்கான இந்திய மக்கள் அமைப்பு புதிய முயற்சியில் ஈடுபட உள்ளது.

சென்னை சாந்தோமில் உள்ள "ஹியர் டு ஹார்ட்' என்ற கால்நடை மருத்துவமனையில் இதற்கான நிகழ்ச்சி மார்ச் 13-இல் நடைபெற உள்ளது. குறிப்பிட்ட மருத்துவமனையில் சுமார் 400 பாத்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும். பறவைகள், கால்நடைகள், தெருநாய்கள் உள்ளிட்டவற்றுக்கு கோடைக் காலத்தில் தண்ணீர் வைக்க விரும்புவோர் இதனை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

அந்தப் பாத்திரங்களில் தண்ணீரை நிரப்பி வீட்டு மாடி, பால்கனி, மொட்டை மாடி, தோட்டம், அலுவலகம், தெரு என்று எங்கு வேண்டுமானாலும் வைக்கலாம்.

அந்தப் பாத்திரத்தில் ஏதாவது ஒரு விலங்கு தண்ணீரை பருகும்போது, அதனை ஒரு புகைப்படம் எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிட வேண்டும். அந்தப் புகைப்படத்தை சுமார் 5 நண்பர்களுடன் இணைத்து, அவர்களையும் இந்தச் செயலில் ஈடுபட வைக்க வேண்டும். இதில், சிறந்த புகைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏப்ரல் 15-இல் முடிவு அறிவிக்கப்படும் என்று நிகழ்ச்சி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

## இரண்டாம் போக பாசனத்துக்கு வைகை அணை திறப்பு

மேலூர் மற்றும் திருமங்கலம் 2 ஆம் போக பாசனத்திற்காக வைகைஅணையிலிருந்து திங்கள்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

தற்போது கதிர்முற்றும் நிலையில் உள்ளதால் தண்ணீர் திறந்து விடவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தையடுத்து, அணையில் இருந்து வினாடிக்கு 1600 கன அடி தண்ணீர் திறந்து

விடப்பட்டுள்ளது. மதுரை மற்றும் ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு 60 கன அடி என மொத்தம் 1660 கன அடி திறந்துவிடப்பட்டுள்ளது. நான்கு நாள்களுக்கு மட்டும் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 20 ஆயிரம் கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் தடுப்பூசி வழங்கல்

அரக்கோணம்: அரக்கோணம் அருகே, ஆந்த்ராக்ஸ் பாதித்து ஆடுகள் இறந்த சம்பவத்தை அடுத்து, அப்பகுதியில் உள்ள, 20,000 கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

அரக்கோணம் அடுத்த நெமிலி, கீழ்வெங்கடாபுரம், செய்யூர், வளர்புரம் பகுதிகளில், கடந்த வாரம், 200 ஆடுகள் ரத்தம் கக்கி இறந்தன. கால்நடைத்துறையினர் நடத்திய ஆய்வில் ஆந்த்ராக்ஸ் நோய் தாக்கி ஆடுகள் இறந்தது தெரியவந்தது. இதையடுத்து, ஆந்த்ராக்ஸ் நோய் மேலும் பரவாமல் தடுக்க, கிராமங்களில், ஐந்து குழுக்கள் அமைத்து, கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இதுகுறித்து கால்நடைத்துறை உதவி இயக்குனர் உதயகுமார் கூறியதாவது: கீழ்வெங்கடாபுரம், ஆட்டுப்பாக்கம், வட கண்டிகை, நெமிலி, சிறுமணமல்லி, சயனபுரம், அசநெல்லிக்குப்பம், நெல்வாய்கண்டிகை என, 20 கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி, 20,000 கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும், ஆந்த்ராக்ஸ் நோய் தாக்கி இறந்த ஆடுகளை அறுக்கக் கூடாது என்றும், அறுத்தால், ஆந்த்ராக்ஸ் நோய் வேகமாக பரவும் என்பதால், ஆழமான குழி தோண்டி புதைக்க வேண்டும் என்றும், எரிக்க கூடாது என, விவசாயிகளிடம் விளக்கி கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**அமராவதி ஆற்றில் தடுப்பணை பணி துவக்கம்: 18 மாதத்தில் முடிக்க பொதுப்பணித்துறை முடிவு**

கரூர்: கரூர் அமராவதி ஆற்றில் தடுப்பணை (செக்டேம்) அமைக்கும் பணி துவங்கிய நிலையில், வரும், 18 மாதத்தில் பணி முடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம், உடுமலையில், அமராவதி அணை நீரை எதிர்பார்த்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில், 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. குடிநீர் தேவைக்காக அமராவதி ஆற்றில் இருந்து, அவ்வப்போது தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. உடுமலையில் துவங்கும் அமராவதி ஆறு, வழியோர வாய்க்கால்கள் குடிநீர் கிணறுகள் போன்றவற்றை கடந்து, 100 கிலோ மீட்டரை தாண்டி, கரூர் மாவட்டம் கடைமடைபகுதியான திருமுக்கூடலூர் காவிரியாற்றில் கலக்கிறது.

ரூ.15.16 கோடி: இந்த தண்ணீர், 'கரூர் மாவட்டத்திற்கு குறைவாகவே வருகிறது' என, விவசாயிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர். இருந்தாலும், அமராவதி ஆற்றில், கிளை ஆறுகளான வரதமாநதி, பாம்பாறு, நங்காஞ்சிஆறு, குடகனாறு ஆகியவை இணைகிறது. மேற்கண்ட ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில், அமராவதி அணையில் இருந்து வரும் நீரும் சேர்ந்து, மாவட்டத்தை வளப்படுத்துகிறது. கடந்த, 2014 மற்றும், 2015ல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதை தவிர்க்க, 'வெள்ளப்பெருக்கு காலங்களில் வீணாகும் தண்ணீரை சேமிக்க தடுப்பணை அமைக்க வேண்டும்' என, விவசாயிகள் மற்றும் பொது மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்தனர். அதையடுத்து, கடந்த, 2015 செப்டம்பரில், 15 கோடியே, 16 லட்சம் ரூபாய் மதிப்பில், தடுப்பணை அமைக்க, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். தற்போது, அதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன. ஜே.சி.பி., இயந்திரம் மூலம் ஆற்றில் உள்ள முட்புதர்கள் அகற்றும் பணி நடக்கிறது.

18 மாதம் இலக்கு: இதுகுறித்து, பொதுப்பணி துறை அதிகாரிகள் கூறியதாவது: அமராவதி ஆற்றில், ஐந்து அடி உயரம், 275 மீட்டர் நீளத்தில், தடுப்பணை அமைக்கப்பட உள்ளது. இதனால், செட்டிபாளையம், அப்பிபாளையம், கருப்பம்பாளையம், சுக்காழியூர்,

ஆண்டாங்கோவில், சின்ன ஆண்டாங்கோவில், விஸ்வநாதபுரி உள்ளிட்ட கிராமங்களில் உள்ள, 220 கிணறுகளின் நீர்மட்டம் உயரும். மேலும், ஒரு கிலோ மீட்டர் தூரம் ஆற்றின் கரையோர பகுதிகளில் நீர்மட்டம் நன்றாக இருக்கும். இப்பகுதி கிராமங்களில் குடிநீர் தேவை முழுமையாக பூர்த்தியாகும். வரும், 18 மாதத்தில் தடுப்பணை பணி நிறைவடையும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## முகப்பருவை போக்கும் வில்வம்




பெண்களுக்கு தேவையான சில மருந்துகள், குறிப்பாக பெண்கள் தங்களது மேனி எழிலை மெருகூட்டிக் கொள்வதற்கான மருந்துகளை எவ்வாறு தயார் செய்யலாம். தோலில் ஏற்படுகிற நமைச்சல், அரிப்பு போன்ற சொரியாசிஸ் என்று சொல்லப்படுகிற பிரச்னைகளுக்கு தேவையான மருத்துவ குறிப்புகளையும் நாம் தற்போது காணலாம். இளம் பெண்கள் அதிகமாக எதிர்கொள்ளும் பிரச்னையான முகப்பருக்கான மேற்பூச்சு மருந்து ஒன்றை தயார் செய்யலாம்.

இதற்கு தேவையான பொருட்கள் வில்வம் பழம், எலுமிச்சை, தேன். வில்வம் பழத்தை உடைத்து அதன் உள்பகுதியில் உள்ள சதைப்பகுதியை பசையாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். சிறிதளவு வில்வ

பசையை எடுத்து அதனுடன் சில துளிகள் எலுமிச்சை சாறு பிழிய வேண்டும். அதே போல் இந்த கலவையுடன் சில துளிகள் தேன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த கலவையை பருக்கள் மீது வைத்து வந்தால் பருக்கள் நீங்கி தோல் அழகு பெறும்.

மேலும் பருக்களால் உண்டாகும் கருமை நிறம் படியாமலும் இது பாதுகாக்கும். பெரும்பாலும் மலச்சிக்கல் காரணமாகவே முகப்பருக்கள் தோன்ற வாய்ப்புள்ளது. அதே போன்று சரியான முறையில் உடலுக்கு தேவையான காய்கறிகள், பழங்கள் போன்ற ஊட்டச்சத்துகள் எடுத்துக் கொள்ளாத போதும் பருக்கள் உண்டாக வாய்ப்பு உள்ளது. ஹார்மோன் சுரப்பிகளில் குறைபாடுகள் இருந்தாலும் பருக்கள் தோன்றும். அதே போல் பெண்கள் அதிகமான எதிர்கொள்ளும் மற்றொரு பிரச்னையான பாத வெடிப்புக்கான மேற்பூச்சு மருந்தை தயார் செய்யலாம்.

இதற்கு தேவையான பொருட்கள் விளக்கெண்ணை, பூசு மஞ்சள் பொடி. மிகவும் எளிய முறையாக இருந்தாலும் மிகவும் சக்தி வாய்ந்ததாக இந்த மருந்து விளங்குகிறது. இரவு நேரத்தில் படுக்க போகும் முன் சிறிதளவு விளக்கெண்ணையில் பூசு மஞ்சளை கலக்கி அதை பாத வெடிப்புகளில் தடவி வர, பாத வெடிப்புகள் குணமாகும். இதை தொடர்ந்து பயன்படுத்துவால் மிகுந்த பயனை உணரலாம். இதனால் குதிகால்களில் ஏற்படும் வலியும் குறையும். அதே போல் பெண்களின் முகத்தில் தோன்றும் தேவையில்லாத ரோமங்களை இயற்கையாக அகற்றுவதை பற்றி பார்க்கலாம்.

இதற்கு தேவையான பொருட்கள். குப்பை மேனி, வேப்பிலை, பூசு மஞ்சள், அரிசி அல்லது பாசிப்பயறு. இந்த நான்கையும் சேர்த்து ஒரு பசையாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த பசையை முகத்தில் தேவையில்லாத ரோமங்கள் இருக்கும் இடங்களில் ஒரு பற்றுபோல் பூச வேண்டும். சுமார் 20 நிமிடங்கள் காய விட்டு பின்னர் அதை அப்படியே முகத்தில் தேய்த்து கழுவ வேண்டும். இதை வாரம் இருமுறை பயன்படுத்தும் போது நல்ல பயனை உணரலாம்.

இது படிப்படியாக தேவையில்லாத ரோமங்களை அகற்ற தொடங்குவதை பார்க்கலாம். அதே போல் தோலில் ஏற்படும் சுருக்கங்களை சரி செய்யும் மேற்பூச்சு மருந்து ஒன்றை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள், சோற்று கற்றாழையின் உள்பகுதியில் இருக்கும் சதை பகுதியை எடுத்துக் கொள்ள வேண்டும். விளக்கெண்ணை. விளக்கெண்ணையுடன் சம அளவு சோற்று கற்றாழை சாறை சேர்க்க

வேண்டும்.

இதை சிறு தீயில் வைத்து தைலமாக காய்ச்சி எடுத்துக் கொள்ள வேண்டும். சோற்று கற்றாழை நன்றாக பொரிந்து வரும் வேளையில் நெருப்பை நிறுத்தி இறக்க வேண்டும். பின்னர் இதை வடிகட்டி எடுத்து வைத்துக் கொள்ளலாம். இந்த தைலத்தை தோலில் சுருக்கங்கள் இருக்கும் இடத்தில், குறிப்பாக பிரசவத்திற்கு பிறகு பெண்களின் அடி வயிற்றில் உருவாகும் சுருக்க தடங்களில் இதை பூசி வருவதால் படிப்படியாக தோல் சுருக்கம் மறைவதை காணலாம்.

## வலி, வீக்கத்தை போக்கும் நெய்வேலி காட்டாமணக்கு




நீர்நிலைகள், சாலை ஓரங்களில் அதிகளவில் வளரக்கூடியது நெய்வேலி காட்டாமணக்கு. அடர்த்தியாக வளரும் இந்த செடியின் பூக்கள் பிங்க் நிறத்தில் அழகாக காட்சி அளிக்கும். இதற்கு மலை ஓணான் செடி, நெய்வேலி காட்டாமணி என்ற பெயர்களும் உண்டு. அற்புதமான பூக்களை கொண்ட செடி. பல்வேறு நன்மைகளை கொண்ட இதன் இலைகள், பூக்கள், வேர்கள் ஆகியவை மருந்தாகிறது. மாதவிலக்கை தூண்டக் கூடியதாகிறது.

வெள்ளைப் புள்ளிகளுக்கு மேல்பூச்சாக பயன்படுகிறது. அடிபட்ட காயங்களை விரைவில் ஆற்றுகிறது. பாம்பு விஷத்தை முறிக்கும் தன்மையை கொண்டது. நெய்வேலி காட்டாமணக்கு செடியின் வேரை பயன்படுத்தி மாதவிலக்கை தூண்டக்கூடிய மற்றும் மலச்சிக்கலை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

இதற்கு தேவையான பொருட்கள்: நெய்வேலி காட்டாமணக்கு வேர், தனியா பொடி, கருஞ்சீரகம், நாட்டு சர்க்கரை.நெய்வேலி காட்டாமணக்கு வேரை நன்றாக காயவைத்து பொடி செய்து வைத்துக் கொள்ளவும். கால் ஸ்பூன் வேர் பொடி எடுக்கவும். இதனுடன் அரை ஸ்பூன் தனியா பொடி, கால் ஸ்பூன் கருஞ்சீரகம், அரை ஸ்பூன் நாட்டு சர்க்கரை சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர் விட்டு நன்றாக கொதிக்க வைக்கவும். இதை குடித்துவர மாதவிலக்கு பிரச்னை சரியாகும். மாதவிலக்கு தூண்டப்படுகிறது. மலச்சிக்கல் பிரச்னை சரியாகும்.

நெய்வேலி காட்டாமணக்கு இலைகள் விஷத்தன்மை உடையதால் கால்நடைகள் சாப்பிடாது. இதை அளவோடு எடுத்துக்கொள்வதால் பல்வேறு நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது. நெய்வேலி காட்டாமணக்கு சர்க்கரை நோய்க்கு மருந்தாகிறது. ஈரலுக்கு பலம் கொடுக்கிறது. நெய்வேலி காட்டாமணக்கு இலைகளை பயன்படுத்தி வலி மற்றும் வீக்கத்தை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

ஒரு பாத்திரத்தில் 2 ஸ்பூன் விளக்கெண்ணெயை தடவி அதன்மீது நெய்வேலி காட்டாமணக்கு இலைகளை வைத்து சூடுபடுத்த வேண்டும். இலைகள் வதங்கிய பின்னர் வலி, வீக்கம் உள்ள இடத்தில் கட்டி வைக்கவும். இது வலியை போக்கும். வீக்கத்தை கரைக்கும். புண்கள் விரைவாக ஆறும். சீல் பிடிக்காது. நெய்வேலி காட்டாமணக்கு இலைகள் மூட்டு வலிக்கு மருந்தாக பயன்படுகிறது. பல்வேறு நன்மைகளை கொண்ட இது, உள் மற்றும் மேல் மருந்தாக பயன்படுகிறது. நெய்வேலி காட்டாமணக்கு செடி விஷத்தன்மை உடையதால் அளவோடுதான் பயன்படுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**கீரையும் காய்கறியும்**



உடல் ஆரோக்கியத்தை தேடி பயணிக்கும் இயந்திர உலகில், இயற்கை மருந்தாய் கிடைத்திருப்பது காய்களும், பழங்களும் தான். இதில், தான் நம் உடலுக்கு தேவையான, அனைத்து முக்கிய சத்துக்களும் நிறைந்துள்ளன. காய்கறி நிறம், மணம், சுவையை உள்ளடக்கியது. காய்கறிகளில் இருந்து மாவுச்சத்து, புரதம், தாது உப்புகள், வைட்டமின்கள் மற்றும் தண்ணீர் ஆகியவை கிடைக்கின்றன. காய்கறிகளில் உள்ள சத்துக்கள் மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து தெரிந்து கொள்ளலாம்...

**நார்ச்சத்து:**

காய்களில் உள்ள நார்ச்சத்து செரிமானத்தை தூண்டி, மலச்சிக்கலை தவிர்க்கிறது. உணவுக் குழாயில் எளிதாக பயணிக்க நார்ச்சத்து உதவும்.

**வைட்டமின் சத்து:**

பச்சை இலை காய்களில், கீரைகளில் தான் அதிகளவில் வைட்டமின் இருக்கிறது. முக்கியமாக கரோட்டின் இருக்கிறது. கரோட்டின் நம் உடம்பில் வைட்டமின்-ஏ ஆக மாற்றப்படுகிறது. இது கண் பார்வையை சீராக்குகிறது. மாலைக்கண் நோயை தடுக்கிறது. கீரை வகைகளில் கரோட்டினுடன் ரைபோபிளேவின் மற்றும் வைட்டமின் சியும் அதிகளவில் உள்ளது.

**தாது உப்புகள்:**

தண்டுகீரை, அகத்தி, வெந்தயக்கீரை மற்றும் முருங்கைக் கீரையில் கால்சியம் அதிகளவில் காணப்படுகிறது. கீரை வகைகளில் இரும்புச் சத்தும் நிறைந்து காணப்படுகிறது. தினமும் நம் உணவுடன், 50 கிராம் கீரையை சேர்த்துக் கொண்டால் நமக்கு ஒரு நாளைக்கு தேவையான இரும்புச்சத்து, கால்சியம், கரோட்டின், வைட்டமின் சி ஆகியவை கிடைத்துவிடும். இவ்வளவு சத்துக்கள் நிறைந்த காய்களை தினமும் பயன்படுத்தி ஆரோக்கியமாக வாழும் போது, மனமும் எவ்வித பிரச்னையை தாங்கக் கூடிய தன்னம்பிக்கையை பெறுகிறது. ஆகவே, ஆரோக்கியமே அனைத்திற்கும் முக்கிய காரணம் என்பதை உணர்ந்து, காய்கறிகளை உணவில் சேர்க்க முன் வரவேண்டும்.

**கண் சோர்வை போக்கும் பொன்னாங்கன்னி கீரை**




தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் நீண்ட நேரம் படிப்பதால், அவர்களுக்கு கண்களுக்கு சோர்வு, எரிச்சல், கண்ணில் அழுக்கு சேருதல் போன்ற நிலை ஏற்படும். உடலில் ஏற்படும் உஷ்ணம், கண்கள் எரிச்சலை போக்க கூடியதும், ஞாபகசக்தி தரவல்லதுமான கீரை பொன்னாங்கன்னிகீரை.

அதிக நேரம் படிப்பதால் கண்கள் சோர்வடையாமல் இருக்கவும், கண்களை பலப்படுத்த கூடியதுமான சிவப்பு பொன்னாங்கன்னி சூப் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: சிவப்பு பொன்னாங்கன்னி

கீரை, வெங்காயம், பூண்டு, மிளகுப்பொடி, உப்பு, நல்லெண்ணெய். ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டு பூண்டு துண்டுகளை போடவும். சிறிது சின்ன வெங்காயம், சிவப்பு பொன்னாங்கன்னி சேர்த்து வதக்கவும். தேவையான அளவு நீர் விட்டு உப்பு சேர்த்து கொதிக்க வைக்கவும்.

இதனுடன் சிறிது மிளகுப்பொடி சேர்த்து சாப்பிட்டால், கண் சோர்வு நீங்கும். நீண்ட நேரம் படிக்க ஏதுவாகிறது. பொன்னாங்கன்னி கீரையை சாப்பிட்டுவர உடல் நலம்பெறும். வெள்ளை பொன்னாங்கன்னி கீரையை பயன்படுத்தி பார்வையை பலப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: வெள்ளை பொன்னாங்கன்னி கீரை, நெய். கீரையை நீர் விடாமல் அரைத்து சாறு எடுக்கவும். 50 மில்லி கீரை சாறு எடுத்தால், சம அளவு நெய் எடுத்து தைலமாக காய்ச்சவும்.

ஆற வைத்து எடுத்துக்கொள்ளவும். தினமும் அரை ஸ்பூன் அளவு குழந்தைகளுக்கு கொடுத்துவந்தால் கண்பார்வை பலப்படும். கண் எரிச்சல் குறையும்.வெள்ளை பொன்னாங்கன்னிக்கு நாட்டு பொன்னாங்கன்னி என்ற பெயரும் உண்டு. இது, வெள்ளை நிற பூக்களை கொண்டது. பொன்னாங்கன்னி உடலுக்கு குளிர்ச்சியை தரக்கூடியது. கண்களுக்கு கூர்மையை தருவதுடன், கண் நரம்புகளுக்கு பலம் தரும். உடலுக்கு தெம்பை கொடுக்கும்.

பள்ளி தேர்வு நெருங்கும் வேளையில் அதிக நேரம் படிப்பதால் சத்துள்ள உணவு தேவை. இதற்கு பொன்னாங்கன்னி பயன்படுகிறது. பொன்னாங்கன்னியை பயன்படுத்தி கண் எரிச்சலை தடுக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: வெள்ளை கரிசலாங்கன்னி, நல்லெண்ணெய், பொன்னாங்கன்னி கீரை. வெள்ளை கரிசாலங்கன்னி, பொன்னாங்கன்னி கீரையை நீர்விடாமல் அரைத்து எடுக்கவும்.

இதனுடன், 2 பங்கு நல்லெண்ணெய் விட்டு சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சி எடுக்கவும். இதை வடிக்கடி தலைக்கு தேய்த்து குளித்தால் உடல் உஷ்ணம் குறையும். கண் சோர்வு நீங்கும். மூளைக்கு குளிர்ச்சி ஏற்பட்டு படிப்பு மனதில் பதியும். பொன்னாங்கன்னியில் பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன. தங்க சத்தை பெற்றுள்ள பொன்னாங்கன்னி கீரை உடலுக்கு பலம் தருவதுடன் வலி நிவாரணியாகிறது. உறுப்புகளை செயல்படுத்துவதாக அமைகிறது. மனச் சோர்வு, உடல் சோர்வை போக்கும் மருந்தாக பயன்படுகிறது.

**பனிக்கால பிரச்னைகளை தீர்க்கும் முருங்கை, கறிவேப்பிலை ரசம்**




முருங்கை ஈர்க்கை பயன்படுத்தி சளி, இருமலை போக்கும் ரசம் தயாரிக்கலாம். முருங்கை ஈர்க்கு என்பது முருங்கை கீரைகளை எடுத்துவிட்டால் கிடைக்கும் குச்சிகள். இதை சிறு துண்டுகளாக வெட்டி எடுக்கவும். இதனுடன் 4 பல் பூண்டு சேர்த்து தட்டி எடுத்து வைத்துக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் நெய் விடவும். நெய் உருகியதும் தாளிக்க கடுகு சேர்க்கவும். கடுகு பொறிந்ததும் இஞ்சி துண்டுகள் சேர்க்கவும். பூண்டு, முருங்கை ஈர்க்கு சேர்த்த கலவை போடவும். பச்சை வாடை போகும்வரை வதக்கவும்.

சிறிது மஞ்சள்பொடி சேர்க்கலாம். இதனுடன் மிளகு, சீரகம், பூண்டு சேர்த்த கலவையை சேர்த்து வதக்கவும். பின்னர், உப்பு சேர்த்து தேவையான அளவு நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். முருங்கை ஈர்க்கு ரசத்தை சாப்பிட்டு வந்தால், மார்கழி, தையில் வரும் சளி, இருமல், காய்ச்சல் தடுக்கப்படும். செரிமான சக்தியை தூண்டுகிறது. முருங்கை பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. உணவிலேயே முக்கியத்துவம் பெற்ற முருங்கையில் இரும்பு, கால்சியம் சத்து உள்ளது.

கறிவேப்பிலை ஈர்க்கை பயன்படுத்தி ரசம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கறிவேப்பிலை ஈர்க்கு, தக்காளி சாறு, கொத்துமல்லி இலைகள், மிளகு, சீரகம், பூண்டு, பெருங்காயம், காய்ந்த மிளகாய், மஞ்சள் பொடி, கடுகு, நல்லெண்ணெய், புளிகரைசல், உப்பு. பாத்திரத்தில் நல்லெண்ணெய் காய்ந்தவுடன், பெருங்காயப் பொடி, கடுகு, காய்ந்த

மிளகாய், கறிவேப்பிலை மற்றும் மிளகு, சீரகம், பூண்டு சேர்ந்த கலவையை சேர்க்கவும். ஒரு சிட்டிகை மஞ்சள் பொடி சேர்க்கவும்.

கறிவேப்பிலை ஈர்க்குகளை சிறிய துண்டுகளாக நசுக்கி எடுத்து சேர்க்கவும். இது வதங்கியவுடன் தக்காளி சாறு, புளி கரைசல், தேவையான அளவு உப்பு, நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதில் கொத்துமல்லி இலைகளை சேர்க்கவும். இந்த ரசத்தை குடித்துவர வாந்தி, குமட்டல், தலைசுற்றல் சரியாகும். சளி, இருமல் இல்லாமல் போகிறது. செரிமானத்தை தூண்டக்கூடியதாகிறது. உடலுக்கு உஷ்ணத்தை கொடுக்கிறது.

அன்னாசி பழத்தை பயன்படுத்தி நோய் எதிர்ப்புசக்தியை அதிகப்படுத்தி ரத்தத்தை சுத்தப்படுத்தும் ரசம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: அன்னாசி பழம், தக்காளி, மஞ்சள் பொடி, கடுகு, நல்லெண்ணெய், பெருங்காயப்பொடி, பூண்டு, சிவப்பு மிளகாய், கறிவேப்பிலை, கொத்துமல்லி, மிளகு, சீரகம், உப்பு. நல்லெண்ணெய், கடுகு, பெருங்காயப்பொடி, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை மற்றும் நறுக்கிய அன்னாசி பழம், தக்காளி துண்டுகள் சேர்த்து வதக்கி மஞ்சள் பொடி சேர்க்கவும்.

இதனுடன் மிளகு, சீரகம், பூண்டு கலவையை சேர்க்கவும். பின்னர், அன்னாசி பழச்சாறு, தக்காளி சாறு, தேவையான உப்பு, கொத்துமல்லி இலை சேர்த்து நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இந்த அன்னாசி ரசத்தை குடித்துவர வயிற்று பூச்சிகள் வெளியேறும். சளித்தொல்லை இருக்காது. செரிமானத்தை சீர்செய்யும். வைட்டமின் சி சத்து அதிகம் உள்ள அன்னாச்சி பழம் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது.

## 7,119 மூட்டை பருத்தி ரூ.1.30 கோடிக்கு ஏலம்

ராசிபுரம் : நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் ஆர்சிஎம்எஸ்சில் பருத்தி ஏலம் விடப்படுகிறது. இந்த ஏலத்தில் ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், சிங்களாந்தபுரம், ஜேடர்பாளையம், கண்ணூர்பட்டி, பாச்சல், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் பருத்தியை விவசாயிகள் கொண்டு வருகின்றனர். நேற்று நடந்த ஏலத்தில், பல்வேறு பகுதிகளில் இருந்து 7,119 பருத்தி மூட்டைகளை வந்திருந்தன. ஏலத்தில் கொங்கணாபுரம், திருச்செங்கோடு, ஆத்தூர், திருப்பூர், அன்னூர், கோவை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டனர். ஆர்.சி.எச் ரக பருத்தி குவிண்டால் ரூ.4,207 முதல் ரூ.4,779க்கும், டி.சி.எச் ரகம் ரூ.6,159 முதல் ரூ.6,579க்கும்

ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில் மொத்தம் 7,119 பருத்தி மூட்டைகள் ரூ.1.30 கோடிக்கு விற்பனையானது.

## ஓசூர் பகுதியில் கொத்தமல்லி விலை வீழ்ச்சி பறிக்காமல் விட்ட விவசாயிகள்

ஓசூர் : கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில், கொத்தமல்லி பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு கொத்தமல்லி பயிரிட ரூ.25 ஆயிரம் செலவு ஆகிறது. இது 40 நாட்களுக்குள் விளைச்சல் கொடுக்கக்கூடியது. நல்ல விலை கிடைத்தால் ஒரு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் வரை வருவாய் தரக்கூடியதாகும். ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகா பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் கொத்தமல்லியை பயிரிட்டிருந்தனர். இந்நிலையில் விளைச்சல் அதிகரிப்பால், கொத்தமல்லி கடந்த சில நாட்களாக மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. ஒரு கட்டு தோட்டத்தில் ரூ.2 க்கு வியாபாரிகள் கேட்பதால், விவசாயிகளுக்கு நஷ்டமேற்பட்டுள்ளது. ஓசூர், தேன்கனிக்கோட்டை பகுதியிலிருந்து கோவை, திருச்சி, சென்னை, சேலம் உள்ளிட்ட நகரங்களுக்கும், ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கும் தினமும் அனுப்பினார்கள். தற்போது எல்லா பகுதியிலும் கொத்தமல்லி விளைச்சல் நன்றாக உள்ளதால், விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கொத்தமல்லியை பறிக்காமல் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தோட்டத்திலேயே விட்டனர்.

## அரியலூர், தா.பழூரில் விவசாயிகளுக்கு பயிற்சி

அரியலூர், : அரியலூர். தா.பழுரில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியத்தில் வட்டார வேளாண்மை துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பண்ணைப்பள்ளி பயிற்சிமுகாம் நடத்தி வருகின்றனர். அதன்படி அணைக்குடத்தில் பண்ணைப்பள்ளி பயிற்சி முகாம் நடத்தினர். நிகழ்ச்சிக்கு வேளாண் உதவி அலுவலர் சிவக்குமார் வரவேற்றார்.

தா.பழூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் பழனிச்சாமி முகாமினை துவக்கி வைத்து பேசுகையில், தா.பழூர் ஒன்றியத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு பயன் பெறும் விதமாக பல்வேறு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அணைக்குடம் பகுதியில் எண்ணெய் வித்து பயிர்கள் பரவலாக பயிர் செய்து வருகின்றனர்.

விதை நேர்த்தி செய்தால் அதிகம் மகசூல் பெற முடியும். அதேபோன்று களை எடுப்பதும் அவசியமான ஒன்றாகும். இப்பயிற்சியில் இதுபோன்ற தொழில் நுட்ப ஆலோசனைகளும், கட்டுப்படுத்து வழிமுறைகளும் உங்களுக்கு வழங்கப்படும். எனவே விவசாயிகள் நீங்கள் அனைவரும் பயன்படுத்திக்கொண்டு பயன் பெற வேண்டும் என்றார். முகாமில் வேளாண் அலுவலர் செல்வக்குமார் மற்றும் அணைக்குடம் பகுதிகளுக்கு உட்பட்ட 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். முகாமிற்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் செய்திருந்தார். உதவி மேலாளர் உஷா நன்றி கூறினார்.

அரியலூர் மாவட்டம் வெங்கடகிருஷ்ணாபுரத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடைப்பெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் மோகன் தலைமை வகித்து பயிற்சி வழங்கினார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் பழனிசாமி பேசினார்.பயிற்சிக்கான விவசாயிகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சுந்தரமூர்த்தி தேர்வு செய்திருந்தார். ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் வாசுகி செய்து இருந்தார். முடிவில் விவசாயி ராமலிங்கம் நன்றி கூறினார்.

**கோமாரிநோய் தடுப்பூசி முகாம்**

திருவிடைமருதூர், :திருவிடைமருதூர் தாலுகாவில் 10வது சுற்றாக கோமாரிநோய் தடுப்பூசி முகாம் முதற்கட்டமாக நேற்று கோவிந்தபுரத்தில் நடந்தது. வருகிற 21ம் தேதி வரை நடக்கிறது. கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரிநோயை தடுக்க தடுப்பூசி போடும் பணி திருவிடைமருதூரில் பல சுற்றுகளாக நடந்து வருகிறது. திருவிடைமருதூர் தாலுகாவிற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள 31 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி 10வது சுற்றாக இம்மாதம் 21ம் தேதி வரை நடைபெற உள்ளது. முதற்கட்டமாக நேற்று கோவிந்தபுரம் ஊராட்சியில் கோமாரி தடுப்பூசி போடும் பணி நடைபெற்றது. ஆடுதுறை கால்நடை டாக்டர் சுதாரோஸ் தலைமையில் கால்நடைத்துறையினர் பங்கேற்று கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். 661 கால்நடைகளுக்கு நேற்று கோமாரிநோய் தடுப்பூசி போடப்பட்டது.

## பாரம்பரிய நெல்லை இயற்கை வேளாண்மையில் மேற்கொள்ள வேண்டும் விதைத்தேர்வு பயிற்சி முகாமில் விவசாயிகளுக்கு ஆலோசனை

திருத்துறைப்பூண்டி : பாரம்பரிய நெல்லை இயற்கை வேளாண்மையில் மேற்கொள்ள வேண்டுமென விதைத்தேர்வு பயிற்சி முகாமில் விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆதிரெங்கம் இயற்கை வேளாண்மை மற்றும் கிரியேட் பயிற்சி மையத்தில் விவசாயிகளுக்கு விதைத்தேர்வு, விதை பாதுகாப்பு, விதை நேர்த்தி குறித்த பாரம்பரிய முறையில் செய்முறை விளக்கத்துடன் பயிற்சி மற்றும் கருத்தரங்கம் நடந்தது. தமிழக இயற்கை உழவர் இயக்க திருவாரூர் மாவட்ட பொருளாளர் சண்முகம் தலைமை வகித்தார். இயற்கை விவசாயிகள் லால்குடி சம்பத், திருச்சி சுரேஷ் கண்ணா, வெங்கடேஷ், மதுரை மகேந்திரன் முன்னிலை வகித்தனர். கிரியேட் களப்பணியாளர் வடிவழகன் வரவேற்றார். பயிற்சியில் நமது நெல்லை பாதுகாப்பம் மாநில ஒருங்கிணைப்பாளர் நெல் ஜெயராமன் பேசுகையில், நம்முடைய பாரம்பரிய நெல்களை பாதுகாப்பது, மறு உற்பத்தி செய்வது, உழவர்களுடைய கைமாற்றி கொள்வது மூலம் உழவர் கையில் விதைகள் இருந்தன. பசுமை புரட்சி திட்டத்தால் விதைகள் எல்லாம் வெளிநாடுகளுக்கு எடுத்து செல்லப்பட்டு ஆராய்ச்சி என்ற பெயரில் குள்ளரக பயிராக திரும்ப வந்து கொண்டிருக்கிறது. அதுக்கு பெயர் ஒட்டுரகம், இந்த ரகம் வெள்ளம் வறட்சிகளை தாக்கு பிடிக்கவில்லை. எனவே இதற்கு மாறாக நம் முன்னோர் பயன்படுத்திய பாரம்பரிய நெல் ரகங்களை உழவர்கள் மத்தியில் பரப்புவதற்கு நம்மாவாழ்வர் எடுத்துரைக்கப்பட்ட பாரம்பரிய நெல் ரகங்களை பரப்பி வருகிறோம். ரசாயன உரங்களால் மண்வளம் கெட்டுவிட்டது. எனவே பசுந்தாள் உரச் செடிகள், பயிர்வகைகள் தானியங்கள் விதைப்பு செய்து வளர்த்து உழவு செய்து அதை உரமாக்கி பாரம்பரிய நெல்லை இயற்கை வேளாண்மையில் மேற்கொள்ள வேண்டும் என்றார். கருத்தரங்கில் அதிக மகசூல் எடுக்க விதை தேர்வு, விதை பாதுகாப்பு, விதை நேர்த்தி செய்முறை விளக்கத்துடன் உழவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பல்வேறு மாவட்டங்களிலிருந்து 45 உழவர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சிமருந்து கிடைக்கும்

பழநி, : விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சிமருந்து வழங்குவதாக வேளாண்துறை சலுகை அறிவித்துள்ளது. பழநி பகுதியில் தற்போது தீவிர விவசாயம் நடந்து வருகிறது. இதுபோன்ற காலங்களில்

விவசாயிகளுக்கு வேளாண்துறை சார்பில் வழக்கமாக பல்வேறு மானியங்கள் வழங்கப்படுவது வழக்கம். தற்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பயிர்களை பாதுகாக்கும் பொருட்டு விவசாயிகள் பூச்சிமருந்து அடித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்க திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண்துறை சார்பில் 50% மானியத்தில் சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

குயினல்பாஸ் மற்றும் என்.பி.வைரஸ் போன்ற பூச்சிமருந்துகள் 50% மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. தேவைப்படும் விவசாயிகள் பழநி தாலுகா அலுவலகத்தில் உள்ள வேளாண்மைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாமென பழநி வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இயற்கை உரமாக பயன்படும் வெள்ளைப்பூண்டு கழிவு

பெரியகுளம், : பெரியகுளம் பகுதியில் வெள்ளைப்பூண்டு கழிவுகளை விவசாயிகள் பெரியகுளம் அருகே வடுகபட்டி, தாமரைக்குளம் பகுதிகளில் வெள்ளைப்பூண்டு கழிவுகளை இயற்கை உரமாக அதிகளவில் பயன்படுத்துகின்றனர். உடனடி விளைச்சலுக்காக மண்ணை தொடர்ச்சியாக ரசாயன உரங்களை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். இந்த உரம் பயன்படுத்தப்பட்ட நிலம் 5 ஆண்டுகளுக்கு பிறகு மண்ணின் வளம் குறைந்து விளைச்சல் பாதிக்கப்படுகிறது.

அதன் பிறகு விவசாயிகள் மண்பரிசோதனை செய்து மண்ணின் வளத்தை அதிகப்படுத்த சிரமப்படுகின்றனர். இயற்கைக்கு மாறும் விவசாயிகள் மண்ணை உழுது, இயற்கை உரங்களான மாட்டுச்சாணம், புண்ணாக்கு கரைசல், சணம்பு உட்பட கீரைச்செடிகளை போட்டு பயிர் செய்கின்றனர். இலவசமாக கிடைக்கும் இயற்கை உரமான வெள்ளைப்பூண்டு கழிவுகளை பயன்படுத்தி அதிகளவு விளைச்சல் பெறுகின்றனர்.

இது குறித்து விவசாயி பெருமாள் கூறுகையில், வெள்ளைப்பூண்டின் அனைத்துப்பகுதிகளும் மருந்துப் பொருளாக பயன்படுகிறது. குறிப்பாக இலவசமாக கிடைக்கும் வெள்ளைப்பூண்டு கழிவுகளை சேகரித்து நிலத்தில் கொட்டி உழும்போது மண்ணில் தீங்கு விளைக்கும் வேர்புழுக்கள் சாகின்றன. மண்ணின் வளமும் அதிகரிக்கிறது. இதனால், வாழை, கரும்பு , தென்னை உட்டபட பல்வேறு வகையான பயிர்களும் விளைச்சல் அதிகரிக்கும்.

**கச்சா முந்திரிக்கு சுங்க வரி குமரியில் 500 முந்திரி தொழிற்சாலைகள் மூடல்**

நாகர்கோவில், : சுங்கவரி விதிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து குமரி மாவட்டத்தில் முந்திரி தொழிற்சாலைகள் நேற்று திடீரென்று மூடப்பட்டன.தமிழகத்தில் முந்திரி தொழிற்சாலைகளுக்கு தேவையான கச்சா முந்திரி வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. இவ்வாறு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற கச்சா முந்திரிக்கு மத்திய அரசு 9.34 சதவீதம் சுங்கவரி விதித்துள்ளது. இதன் காரணமாக ஒரு கிலோ முந்திரிக்கு ரூ.10.50 விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வரிவிதிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து இரண்டு நாட்கள் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக தமிழ்நாடு முந்திரி தொழிற்சாலை உரிமையாளர் சங்கம் அறிவித்திருந்தது.

குமரி மாவட்டத்தில் இந்த வேலைநிறுத்த போராட்டம் காரணமாக வேர்கிளம்பி, ஆற்றூர், பேச்சிப்பாறை, மேல்புறம், குலசேகரம், திருவட்டார், திற்பரப்பு, மணலிவிளை, களியக்காவிளை, புதுக்கடை என்று மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 500க்கும் மேற்பட்ட முந்திரி தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தன. இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டது. முந்திரி பருப்பு உற்பத்தியும் பாதிக்கப்பட்டது.

தமிழகத்தில் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட முந்திரி தொழிற்சாலைகள் திறக்கப்படவில்லை.கச்சா முந்திரி இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட வரியை உடனே ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்த போராட்டம் தொடர்ந்து இன்றும் நடைபெறுகிறது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ரூ.15¼ கோடியில் ஆண்டான்கோவில் பெரியார்நகர் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி தீவிரம்



ரூ.15¼ கோடியில் ஆண்டான் கோவில் பெரியார்நகர் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி தொடங்கி தீவிரமாக நடந்து வருகிறது.

தடுப்பணை

ரூ.15 கோடியே 16 லட்சத்தில் ஆண்டான்கோவில் பெரியார்நகர் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும் என்று சட்டசபையில் அறிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து ஆண்டான் கோவில் பெரியார்நகர் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை

கட்டுவதற்காக அமராவதி வடிநில கோட்ட அதிகாரிகள் திட்ட வரைவு தயாரித்தனர். அந்த திட்ட வரைவு தயாரிக்கப்பட்ட அதே இடத்தில் தடுப்பணை கட்டுவதற்கான பணி தொடங்கியுள்ளது. அதன்படி முதல் கட்டமாக ஆண்டான்கோவில் பெரியார்நகர் பகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைய உள்ள இடத்தில் முள் செடிகள், புதர் மண்டி கிடக்கும் செடி, கொடிகளை பொக்ளின் எந்திரம் மூலம் அப்புறப்படுத்தும் பணி தொடங்கி தீவிரமாக நடந்து வருகிறது. இந்த பணிகளை அமராவதி வடி நில பிரிவு உதவி செயற்பொறியாளர் சரவணன், உதவி பொறியாளர் ராஜா தலைமையில் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இது குறித்து உதவி செயற்பொறியாளர் ராஜா கூறியதாவது:-

275 மீட்டர் நீளம்

ஆண்டான்கோவில் பெரியார்நகர் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி தற்போது தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி 275 மீட்டர் நீளத்திலும், 5 அடி உயரத்திலும் தடுப்பணை கட்டப்படவுள்ளது. இந்த தடுப்பணை கட்டுவதன் மூலம் செட்டிப்பாளையம், அப்பிபாளையம், கருப்பம்பாளையம், சுக்காலியூர், ஆண்டான்கோவில், விசுவநாதபுரி ஆகிய கிராமங்களை சுற்றி உள்ள 220 கிணறுகளின் நீர்மட்டம் உயரும். அதே போன்று 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு கிணறு மற்றும் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இதனால் இந்த பகுதி மக்களுக்கு விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் கிடைக்கும். அதேபோன்று குடிநீர் பிரச்சினை இருக்காது. மேலும் தடுப்பணை கட்டிய பிறகு கரூர் நகராட்சி சார்பில் குடிநீர் குழாய் அமைத்தால், கரூர் நகராட்சி பகுதி மக்களுக்கு குடிநீர் பிரச்சினையே இருக்காது. இவ்வாறு அவர் கூறினார்.

**கோழித் தீவனத்தில் அமினோ அமிலம் சேர்க்க வேண்டும் ஆராய்ச்சி நிலையம் தகவல்**



முட்டையின் எடை குறையாமல் இருக்க கோழித் தீவனத்தில் அமினோ அமிலம் சேர்க்க வேண்டும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அடுத்த 3 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று மணிக்கு 7 கி.மீ. வேகத்தில் தென்கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 96.8 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 71.6 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 66

சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 38 சதவீதமாகவும் இருக்கும்.

அமினோ அமிலம்

பகல் மற்றும் இரவு வெப்பம் அடுத்த 3 நாட்களுக்கு உயராமல் இருக்கும் என்பதால், கோழிகளில் வெப்ப அயற்சி இருக்காது. இருப்பினும் தற்போது நிலவி வரும் வெப்ப அளவுகள் தீவன எடுப்பை சற்றே குறைக்கும் வாய்ப்பு உள்ளதால் முட்டையின் எடை மற்றும் அதன் வடிவம் மாறுபடலாம்.

எனவே அம்மாற்றங்களை தவிர்க்க தீவனத்தில் தேவையான அளவிற்கு அமினோ அமிலங்களை சேர்க்க வேண்டும். குறிப்பாக மித்தியோனின் மற்றும் லைசின் ஆகியவற்றை பயன்படுத்த தொடங்க வேண்டும். இதனால் அமீனோ அமிலங்களின் குறை நீங்கி, முட்டை எடை மற்றும் உற்பத்தி குறையாமல் தடுக்கலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு வினாடிக்கு 2,000 கனஅடியாக அதிகரிப்பு



மேட்டூர் அணையில் இருந்து கடந்த 23–ந் தேதி முதல் குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. முன்னதாக வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதையடுத்து ஒருசில நாட்களிலேயே குடிநீருக்கான தண்ணீர் தேவை அதிகரித்ததால் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 1,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

இதையடுத்து கடந்த 2 நாட்களுக்கு முன்பு தண்ணீர் திறப்பு வினாடிக்கு 1,500 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இந்த நிலையில் குடிநீருக்கான தேவை மேலும் அதிகரித்து உள்ளதால், நேற்று இரவு 8 மணி முதல் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 2,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. இந்த தண்ணீர் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு உள்ள பவானி கட்டளை–2 கதவணை மின்நிலையத்தின் வழியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60.95 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 129 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

**மாசி அமாவாசையையொட்டி உழவர் சந்தைகளில் ரூ.36¼ லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை**



மாசி அமாவாசையையொட்டி சேலம் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் ரூ.36 லட்சத்து 41 ஆயிரத்து 255-க்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன.

மாசி அமாவாசை

சேலம் மாவட்டத்தில் சூரமங்கலம், அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, தாதகாப்பட்டி, ஆட்டையாம்பட்டி, ஆத்தூர், மேட்டூர், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், இளம்பிள்ளை, இடைப்பாடி என 11 இடங்களில் உழவர் சந்தைகள் உள்ளன. அங்கு விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளையும் காய்கறிகளை கொண்டு வந்து நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் மாசி அமாவாசையொட்டி நேற்று உழவர் சந்தைகளில் காய்கறிகள் வாங்க வந்த நுகர்வோர் எண்ணிக்கை வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. இதையொட்டி அகத்திக்கீரை, வாழை இலை, வாழைப்பழம், கத்தரிக்காய், அவரைக்காய், பூசணிக்காய், வெள்ளை பூசணிக்காய், பூ, வெற்றிலை போன்றவைகள் அதிக அளவில் விற்பனை ஆனது.

காய்கறிகள் விற்பனை

சேலம் சூரமங்கலம் உழவர் சந்தையில் 190 விவசாயிகள் 45 ஆயிரத்து 640 கிலோ காய்கறிகளை கொண்டு வந்தனர். இந்த காய்கறிகளை 9 ஆயிரத்து 128 நுகர்வோர்கள் வாங்கிச்சென்றனர். இதனால் இங்கு காய்கறிகள் ரூ.8 லட்சத்து 26 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. தாதகாப்பட்டி உழவர் சந்தைக்கு 190 விவசாயிகள் 30 ஆயிரம் கிலோ காய்கறிகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். அவை, ரூ.5 லட்சத்து 8 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

அம்மாபேட்டை உழவர் சந்தையில் 102 விவசாயிகள் கொண்டு வந்த 17 ஆயிரம் கிலோ காய்கறிகள் ரூ.3 லட்சத்து 3 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. அஸ்தம்பட்டி உழவர் சந்தைக்கு 70 விவசாயிகள் 14 ஆயிரம் கிலோ காய்கறிகளை கொண்டு வந்தனர். இவை ரூ.3 லட்சத்து 2 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

ரூ.36¼ லட்சத்துக்கு விற்பனை

சேலம் மாவட்டத்தில் உள்ள 11 உழவர் சந்தைகளிலும் 1,089 விவசாயிகள் 1 லட்சத்து 98 ஆயிரம் கிலோ காய்கறிகளை கொண்டு வந்திருந்தனர். இந்த காய்கறிகள் மொத்தம் ரூ.36 லட்சத்து 41 ஆயிரத்து 255-க்கு விற்பனை ஆனது. 42 ஆயிரத்து 865 நுகர்வோர்கள் காய்கறிகளை வாங்கி சென்றுள்ளனர் என்று உழவர் சந்தை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நெல்லில் புகையான், குலைநோய் தாக்குதலை தடுப்பது எப்படி? வேளாண் அதிகாரி விளக்கம்




திருவண்ணாமலை,
நெற்பயிர்களை தாக்கும் புகையான், குலைநோய் தாக்குதலை சரியான கலவையில் பூச்சிக்கொல்லி மருந்து அடித்தால் கட்டுப்படுத்தலாம் என விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அதிகாரி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

<u>அதிக அளவில் நெல் பயிர்</u>

திருவண்ணாமலை மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டமாகும். கடந்த ஆண்டு போதுமான அளவில் பருவமழை பெய்ததால் அனைத்து நீர்நிலைகளும் நிரம்பின. இதனையடுத்து விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நெல் பயிரிட்டுள்ளனர். வேலூர் மாவட்டத்திலிருந்து திருவண்ணாமலை மாவட்டத்துக்குள் நுழையும்

இடமான கண்ணமங்கலத்திலிருந்து போளூர் வரையும், பின்னர் போளூரிலிருந்து திருவண்ணாமலை வரையும் சாலையின் இருபுறமும் உள்ள வயல் வெளிகளில் நெற்பயிர்கள் வளர்ந்து பச்சை கம்பளம் போர்த்தியதுபோல் தற்போது பசுமையாக காட்சியளிக்கிறது.

தற்போது நெல்பயிர்கள் பால் பிடித்து கதிர்வரும் தருவாயில் உள்ளது. 3 ஆண்டுகளாக போதிய மழையின்றி பயிர் செய்யாமல் இருந்த விவசாயிகள் இப்போதுள்ள தண்ணீரை பயன்படுத்தி நெற்பயிர் சாகுபடி செய்துள்ளனர். பசுமையாக நெற்பயிர்கள் வளர்ந்த நிலையில் அதிக லாபம் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். ஆனால் இப்போது பல வயல்களில் நெற்பயிரில் குலைநோய் மற்றும் புகையான் நோய் தாக்குதல் தென்படுவதால் மகசூல் முற்றிலும் பாதிக்கப்படும் நிலை உள்ளது. இதனால் விளைச்சல் குறைந்து விடுமோ என விவசாயிகள் மிகுந்த கலக்கம் அடைந்துள்ளனர்.

<u>தடுப்பது எப்படி?</u>

இதுபோன்ற நோய்களை கட்டுப்படுத்த சரியான கலவையில் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க வேண்டும் என மாவட்ட வேளாண் உதவி இயக்குனர் கண்ணகி கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:–

நெற்பயிரில் புகையான் நோய் மற்றும் குலைநோய் தாக்குதலுக்கு முக்கிய காரணம் விவசாயிகள் நெய்பயிருக்கு அதிக அளவிற்கு யூரியாவை இடுவதால் தான் ஏற்படுகிறது. குலைநோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட நெற்பயிரை பாதுகாக்க ஒரு ஏக்கருக்கு ‘டிரைசைகிளோசோல்’ அல்லது கார்பென்டசிம் மருந்தை 500 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

புகையான் நோயை தடுக்க ஒரு ஏக்கருக்கு ‘போஸலோன்ஸ 35 இசி’ என்ற மருந்தை 1,500 மில்லி, அல்லது ‘குளோர்பைரிபாஸ் 20 இசி’ என்ற மருந்தை 1, 250 மிலி அல்லது ‘பாஸ்பாமிடான்’ 875 மில்லி ‘டிரையசோபாஸ் இசி 625’ என்ற மருந்தை 1250 மிலி என இவற்றில் ஏதாவது ஒன்றினை தெளித்து நெற்பயிர்களுக்கு அடிக்கலாம். இதன் மூலம் புகையான் நோயை கட்டுப்படுத்தலாம் என்றார்.